மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
அ.வ.எண். 136 / 2021
வா.சா.1

தேதி : 18.4.2023

பெயர் : பொன்னம்மாள் த/பெ :
வயது : தொழில் :
கிராமம்: மாவட்டம்:

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை..</u>

தேனம்மாள் என் மாமியார் ஆவார். வழக்கு சொத்து தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து நன்செய் நிலமாகும். வழக்கு சொத்தின் சர்வே எண். ஞாபகமில்லை. எத்தனை செண்ட் என்றால் 72 செண்ட். பிரதிவாதிஞானபுஷ்பம் தேனம்மாளின் மகள் ஆவார். என் மாமியார் 2005ல் இறந்தார். என் மாமனார்பெயர் யோசேப்பு. என் மாமனார்இறந்துவிட்டார். என் மாமனார் எந்தவித விருப்புறுதிஆவணம் எழுதிவைக்காமல்தான் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் எண். 34.ஆகும். பழைய எண். 29 என்றால் சரிதான். தபசில் வீடு தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் என் மாமனாருக்கு பாத்தியப்பட்டது. என் மாமனார் பெயரில் கிரைய பத்திரம் இல்லை. என் மாமனார்பெயரில் பட்டா உள்ளதா என்றால் தெரியாது.நான் பாகப்பிரிவினை கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. என் மாமனாருக்கு என் கணவர் மாசிலாமணி மற்றும் ஞானபுஷ்பம் ஆகியோர் வாரிசுகள். ஞானபுஷ்பம்தான் 1ம் பிரதிவாதி என்றால்சரிதான். மாசிலாமணிக்கு வழக்கில் 1 முதல் 4 வாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். வீடை என் மாமனார் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால்சரிதான். நான் குடியிருக்கும் வீட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தால் என் மாமனார் மாமியாருக்கு பாத்தியப்பட்ட எல்லாசொத்துக்களையும் சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால்சரியல்ல. நான் குடியிருக்கும்வீடும் தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு பாத்தியப்பட்டது. தேனம்மாளுக்கு பாத்தியப்பட்ட எல்லா

சொத்துக்களையும் சேர்க்காததால் இந்த வழக்கானது பகுதி பாகப்பிவிரினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தேனம்மாள் எந்தவித விருப்புறுதி ஆவணமும் எழுதிவைக்காமல் 20.9.2005 தேதியில் காலமாகி விட்டார் என்று பிராதில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தேனம்மாள் உயிருடன் இருக்கும்போதே நல்ல சிந்தனையுடனும், நல்ல மனநிலையுடனும் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

3. அந்த உயில் 20.4.2003 ல் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அப்படிஒரு உயில் இருக்கும் இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பே எனக்குதெரியும் என்றால் சரியல்ல. என் மாமியார் தேனாம்மாள் 2005 ல் காலமானபின்பு மேற்படி உயில்ஊர்ஜிதத்திற்கு வந்து பிரதிவாதி பிராது தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த உயிலில் கூறப்பட்டுள்ள 2 ம் அயிட்ட வீட்டில் நான் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறேன் என்றால்சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா தேனம்மாள் பெயரில் உள்ளது. நான் அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தேனம்மாள் பெயரில் நான் சொல்வது போன்று வழக்கு சொத்தின் பட்டா இல்லை என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 3 லேயே பிராது தபசில் சொத்து பிரதிவாதி பெயரில்தான் உள்ளதென்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ளது போல் வழக்குசொத்து கூட்டுஅனுபவத்தில் கிடையாது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து பிரதிவாதியின் தனித்த அனுபவத்தில் உள்ளதென்றால் சரியல்ல.

4. நான் பட்டாவில் என் பெயரை சேர்க்கசொல்லி ஏரல் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் கொடுக்கவில்லை. அந்த மனுவின் அடிப்படையில் பெயரை சேர்க்காததால் நான் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு பட்டாவில் என் பெயரை சேர்க்கசொல்லி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த நீதிபேராணை மனுவில் ஏரல் வட்டாட்சியர் பதில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த பதில் மனுவில் வட்டாட்சியர் 20.4.2003 ல் உயிலின் அடிப்படையில் பிரதிவாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்த விபரம் நீதிபேராணை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் பிரதிவாதியிடம் தபசில் சொத்தை பாகம்பிரித்து கேட்டதாக சொல்லியுள்ளது எந்த தேதியில் கேட்டேன் என்றால் ஞாபகமில்லை.

5. பிரதிவாதிக்கு பிராது தபசில் சொத்தை பிரித்து தரக்கேட்டு வழக்கறிஞர்அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 10.4.2021ல் வாதிகள் அனைவரும் பிரதிவாதியிடம் பிராது தபசில் சொத்தை பிரித்துத்தர கேட்டதாக சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 10.4.2021ல் நான் சொல்வது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் எனக்கு எந்த விதபாகமும் கிடையாது என்றால் சரியல்ல, 20.9.2005க்குபின்பு பிரதிவாதி பிராது தபசில் சொத்தை தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் எங்கள்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அனைத்துசொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கானது பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு வேண்டாத நபர்களின் பேச்சைக்கேட்டுக்கொண்டு பொய்யான காரணம் கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல.

6. பிராது தபசில் சொத்தை பொறுத்து கூட் டு அனுபவம் இல்லாததால் தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37 (2)ன் கீழ் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதில் நான் கூறியிருக்கும் வழக்கு மூலம் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒ/ம்–சா.முத்துலெட்சுமி, பி.ஏ.எம்.எல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஸ்ரீவைகுண்டம்